Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC.No. 238/2025 | | |
| Witness for Complainant | : PW1– Chief and Cross | | |
| Name | : தருமன் | Taluk | : ஊத்தங்கரை |
| Father's / Husband Name | : | Calling : | |
| Village | : | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 25.03.2026.

துவக்க நேரம்– 1.40 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது சின்னகுன்னத்தூர் புளியந்தோப்பில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சமாதான மனு அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுடகிறது.** எதிரிகளும் நாங்களும் தற்போது சமாதானமாகி விட்டோம். அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் வேண்டாம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கோரப்பட்டு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் , குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த கடந்த 15.2.2025 தேதி பகல் சுமார் 12 மணி அளவில் எனக்கு சேர வேண்டிய வரப்பில் வேலை செய்து கொண்டிருந்தபோது அங்கு

வந்த ஜோதி மற்றும் அவரது மனைவி பவானி மற்றும் அவர்களது மகன் கார்த்திக் ஆகியோர் எங்கள் வரப்பில் நீ வேலை செய்யக்கூடாது என்று ஆபாசமாக பேசி கையில் வைத்திருந்த கல்லால் எனது இடது பக்க தலை பகுதியில் அடித்ததில் காயம் ஏற்பட்டது என்றும், பவானி என்பவர் கையால் முதுகில் அடித்தார் என்றும் கார்த்திக் என்பவர் கையால் முதுகில் அடித்தார் என்றும் அப்போது என் மனைவி தடுத்தார் என்றும் பிறகு காயமடைந்த என்னை ஊத்தங்கரை ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதால் உண்மை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை.

முடிவு நேரம்– 2.10 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.